தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௰௯ } சுபானு—கார்த்திகை 1943—நவம்பர் { மலர் ௮

பொழிற்றொண்டர் குறிப்புக்கள்

நன்றியறிவும், வாழ்த்தும்.

நமது பொழில் தோன்றிய காலமுதலே, சங்கம், இதன் தொண்டனாகும் பெரும் பேற்றை, எளியேற்கு அளித்து நெடுங் காலம் போற்றி வந்துளது. இடையே, யான் வேற்றூர்சென்று தாய்மொழித் தொண்டியற்ற நேர்ந்தமையின் விடுதிபெற்றிருந் தேனாயினும், மீண்டும் இங்குவந்துற்ற காலை, அப்பேற்றினைத் தந்தருளிப் போற்றி வந்தது. யான், வரவர, முதிர்ச்சி தளர்ச்சிகள் எய்தி வருவதனையும், கல்லூரித்தொண்டு சங்கத் தின் ஆக்கங்குறித்த பிறதொண்டுகள் முதலியவற்றில் இன்னும், மிக்க உழைப்பும் ஊக்கமும் கொள்ள இடம்பெறலாமென்ப தனையும் கருதிய சங்கம், இதுபோது, எனக்கு அத்தொண்டின் ஓய்வு தந்துள்ளது. இங்ஙனம், பொழிற்றொண்டனாம் பெருமை யினை என்பாற்றேற்றி, அதனைப் போற்றி வளர்த்து, இன்று எனக்கு ஓய்வு தந்த சங்கத்தின் அருட்செயல்களை நான் என்றும் மறவேனாகி, எனது மனமார்ந்த நன்றியினையும் வாழ்த்தினையும் சங்கத்தார்க்கும் பொழிலன்பர்கட்கும் தெரிவிக்கின்றேன்.

இனி, நமது பொழிலாசிரியராக வருவார் நமது அன்பர் **வித்துவான் திரு. கோ. சி. பெரியசாமிப்புலவர் அவர்கள்** இவர்கள் சங்கத்தின்பாற் பேரன்பு பூண்ட கல்லூரி ஆசிரியர்களுள் ஒருவராவர். பொழிலாசிரியரெனும் பெயர் எய்தாமலே, அத் தொண்டினைச்செய்து வந்த ஆசிரியர்களுள் ஒருவர். இன்னோர் செய்யும் தொண்டில், எளியேனும் அங்ஙனமே இயன்ற தொண்டுகளைச் செய்து மகிழும் பேறு உடையேன் ஆவேன்.

வே.

இரங்கற் கூட்டம்.

திருத்தவத்துறை, (லால்குடி) நிலக்கிழவர், உயர்திருவாளர் இராவுசாகிபு T. நடராசப்பிள்ளை அவர்கள் 28—10—43 வியாழனன்று மண்ணுலக வாழ்வை நீத்ததை முன்னிட்டு, திருச்சி சில்லா பொதுமக்கள் கூட்டமொன்று 7—11—43 ஞாயிறு மாலை 4 மணிக்கு, திருத்தவத்துறை நாட்டாண்மை உயர்தரப் பாடசாலையில் நடை பெற்றது. அக் கூட்டத்திற்கு, சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தலைவர், உயர்திருவாளர் திவான்பகதூர் T. M. நாராயணசாமிப்பிள்ளை அவர்கள் M. A. B. L., தலைமை தாங்கினர்கள். பல பெரியோர்கள் பிள்ளையவர்களின் அருங் குணங்களைப் பாராட்டிப் பேசினர்கள். பிள்ளையவர்களின் திருமகனர் இராவுசாகிபு L. N. பரமசிவம்பிள்ளையவர்களைத் தமிழ் நாடு நன்கறியும். அவர்கள் நம் புலவர்கல்லூரியின் வளர்ச்சி வேண்டி ஆயிரம் வெண்பொன் அருளியவர். இன்னும் பேரருள் புரிய உள்ளம் கொண்டவர். இத்தகு பண்பமை பெரியார் நம் சங்கப் பேரன்பர் இராவு சாகிபு L. N. பரமசிவம்பிள்ளையவர்கள் தந்தையார் இறைவனடியில் என்றென்றும் இன்புற்றிருக்க ஆண்டவனை வழுத்துகின்றோம்.

செய்திகள்.

திரு. இராசராச சோழர் சதய விழா.

தஞ்சைப் பெரிய கோவிலின்கண் திரு இராசராச சோழர் சதயவிழா 7—11—43 ஞாயிறு மாலை மிகச் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது.

இவ்விழாவிற்குத் தஞ்சைமாவட்டத்தலைமை நீதியந்தலைவர் உயர் திரு. M. அனந்தநாராயணன் M. A., I. C. S., அவர்கள் தலைமை தாங்கினர்கள்.

அதுபோது, பண்டித பூஷணம் உயர்திரு. ஆறுமுகம்பிள்ளை (நாகர் கோவில்) அவர்கள் "கண்ணப்பர் சரித்திரம்" என்னும் பொருள்பற்றி ஓர் அரிய இனிய விரிவுரை நிகழ்த்தினர்கள். 'குக ஸ்ரீ கிருபானந்தவாரி' அவர்கள் "திருவருட்பாவின் திறம்" என்ற பொருள்பற்றிப் பேசினர்கள். இச் சொற்பொழிவுகளை

ஆயிரக்கணக்கான மக்கள் செவிமடுத்தின் புற்றனர். இவ்விழா வினை இங்ஙனம் சிறப்புற நிகழ்த்திய தஞ்சைக் கோயிற் பணி யாளர் தலைவர் உயர்திரு. K. M. நரசிம்மம் B. SC., F. R. F. S., (Lon.) அவர்களை மிகுதியும் பாராட்டுகின்றோம்.

சங்க விரிவுரைக் கூட்டம்.

உழவன்.

சுபானு ஐப்பசி, எ ஆம் நாள் ஞாயிறு மாலை ஆறு மணிக்கு இச்சங்கப் பெருமன்றத்தில் திரு. மா. அனந்த நாராயணய்யர் M. A., I. C. S. (District Judge) தலைமையில், நம் சங்க அமைச்சர் திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள் "இராமலிங்க அடிகள் இலக்கிய நயம்" என்னும் பொருள் பற்றிச் சிறந்த உரை விருந் தளித்தார்கள். தேசியப் போர்முனை இயக்கத்தின் இசையாளர் விரிவுரை தொடங்கு முன்னும் பின்னும் இனிது பாடி அவையை மகிழ்வித்தனர். சங்கத் தலைவர், தலைமை தாங்கிக் கூட்டத்தைச் சிறப்பிக்கும் தலைவர் அவர்களையும் விரிவுரை ஆற்றும் அமைச்சர் அவர்களையும் பாராட்டிச் சங்கநோக்கங்கள் இனிது நடை பெறப் பெரும் பொருள் வேண்டியிருப்பதைக் குறிப்பிட்டு அதற்கான பொருளீட்டு முயற்சியை மேற்கொண்டுள்ளமைக் கும், இது பொழுது தனித்தமிழ் மட்டும் பயிற்றிவரும் நம் புலவர் கல்லூரியில் Tamil Hons' B. O. L. எனும் பட்டத்திற் குரிய வகுப்புக்களும் தொடங்கி நடத்தற்கும் அன்பர்களின் பேரருள் வேண்டும் என்பதையும் எடுத்துரைத்தார்கள். பின்னர், கரந்தைக் கவியரசர் அவர்கள் அவைத்தலைவரின் அருமைத் தந்தையார் சிறந்த பேரறிஞர் என்றும், அவர் பல ஆங்கில நாடகநூல்களைத் தமிழ்ப் படுத்தித் தமிழ் இலக்கிய உரைநடைப் பகுதியை வளம்படுத்தியவர் என்றும், இவர்களு டைய தந்தை தம் கடமையை நிறைவித்து மகனை அவையத்து முந்தியிருக்கச் செய்த சான்றோர் என்றும், இவர்கள் பெருமை யாலும் புலமையாலும் இவன் தந்தை என்னோற்றான்கொல் எனும் சொற்பெற்று விளங்குகிறார்கள் என்றும் கூறி, சங்க அமைச்சர் அவர்கள் கல்வி, உழவு, வாணிகம், அரசியல் ஆகிய பல துறைகளிலும் சிறந்து அத்தகைய ஒவ்வொரு சார் பினரும் தம்மவர் என்று வழக்கிடற்கிலக்கியமாக விளங்கு கிறார்கள் என்று பாராட்டி, அவர்களின் மேதகு புலமையினை எடுத்துக்காட்டி, யாவர்க்கும் நன்றிகூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

அவைந்தலைவரவர்களின் முன்னுரைச் சுருக்கம்.

புலவர் பெருமக்களிடையே தெய்வ அருள் மிகப் பெற்ற தமிழ்ப்பெரியார்களைப்பற்றி, உலகியலில் உழலும் நம்மனோர் பேசல் தகவன்றேனும் நல்லோர் புகழ்பேலும் நன்றாதலின் ஏதோ சில கூறுவன் என்று தொடங்கித் தலைமைப் பேறளித்தமைக்கு நன்றியுங் கூறினர். தமிழானது வீடு, கல்லூரி, வீதி முதலிய இடங்களில் பலதிறமாய் வழங்குகின்றதென்றும், உலக வழக்கிற்கும் நூல் வழக்கிற்கும் வேறுபாடு மிக்கதின் காரணம் நாளடைவில் பெரும்பாலன மக்கள் நூற்பயிற்சி இழந்தமை என்றும் சங்கத்தமிழில் பேச முயற்சியும், பயிற்சியும் மிகத் தேவை யென்றும், இன்று தமிழ்ச் சொல் எது பிறமொழிச் சொல் எதுவென்று அறிதியிட முடியாதவாறு பிறமொழிச் சொற்கள் கலந்து வழங்குகின்றன வென்றும், தலைவர் முன்னுரை வழங்கல் மேல் நாட்டு வழக்கென்றும், பெரியோர்கள் கூறுதலை அமைதியுடன் கேட்டிருத்தலே தமிழ் வழக்கென்றும், இன்றைய பேச்சிற்கமைந்த பொருள் மிகச்சிறந்ததென்றும், நம் நாட்டில் இலக்கியத்திறமையைத் தனித்து கண்டதில்லை என்றும், வாழ்க்கையால் காவியம் விளங்குகிறது, காவியமே வாழ்க்கையாகிறதென்றும், அதற்குக் கம்பர் எடுத்துக்காட்டாவாரென்றும் தத்துவம், அனுபவமேன்மை விளங்க இராமலிங்க அடிகள் தாம் கண்ட உண்மைகளை எல்லாரும் அறிய அருளி உள்ளார் என்றும், நாம் தன்னல இருளில் மூழ்கியிருக்கின்றோம், அவ்விருளை ஓட்டும் ஒளிக்கதிரே அடிகளின் வாக்கென்றும், தியாகராசச் செட்டியார் திருவாசகத்திற்கு உரை எழுத மறுத்தமையைக் குறிப்பிட்டு அங்ஙனம் ஆன்றோர் கருத்தினை முழுதும் அறிதல் அருமை யென்பதையும் விளக்கிப் பேசினர்கள்.

திரு. நீ. க. அவர்களின் விரிவுரைச் சுருக்கம்.

இராமலிங்க அடிகள் நம் நாட்டில் சென்ற நூற்றாண்டில் தோன்றி ஐம்பத்து நான்காண்டுகள் வாழ்ந்தாரென்றும், அவர் அருளியன ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட நயமிக்க இலக்கியங்கள் என்றும், ஆண்டவனுக் கிலக்கணம் நூல், நூலுக்கிலக்கியம் நாட்டுமக்கள் என்றும், செவிபுக்க அளவிலேயே உணர்ச்சி ஊட்டக்கூடிய செய்யுட்கள் தாம் இலக்கியத்தின் முதற்படி யென்றும் ஓசை நயத்தை விளக்க "கண்ணப்பா என்றருளும்" எனவும்" "பண்ணேர் மொழியடியார்" எனவும் தொடங்கும் பாக்களை எடுத்துக் காட்டியும், உவமை நயத்திற்கு, "அந்தோ துயரில் எனவும், "பாம்பாயினும் மனைப்பால"........எனவும் தொடங்கும் பாக்களை விளக்கி, தன்பகைகளைப் போற்றல்

உலகியல்பென்று எடுத்துக்காட்டியும் காணக்கூடாத நிகழக்கூடிய உவமைகளை "அற்கண்டம் ஓங்கும் அரசே"......... எனத்தொடங்கும் பாக்களையும் எடுத்துக்காட்டியும், உலகியலைக் கூறும் முகத்தால் ஆசிரியர் நிலையை சித்தரித்த கறிபிடித்த எனத் தொடங்கும் பாவினைக் காட்டியும் இதெல்லாம் உலகியலையும், இயற்கையையும் ஓட்டிச் சமயத்தைப் புகுத்தும் தன்மையவென்றும். மருத்துவன் உடலைத்தூய்மை செய்து மருந்தேற்கச் செய்யும் மியல்பு போல் மனதைத் தூய்மை செய்து பின்னர் உயர்ந்த கருத்துக்களைப் புகுத்துதல் ஆன்றோர்கள் இயல்பென்றும் கூறி, "வடி இதழ்க்காந்தள்"—என்னும் திருமுறைப் பாட்டினை இலக்கியமாய்க் காட்டி, பழஞ்செய்யுட்கட்கு விரிவுரை போன்று அடிகள் பாடிய செய்யுட்களையும் எடுத்துக் காட்டி வெளியிட மிருந்தறிதல் உள்ளத்தெழுதல் ஆகக் கல்வி இருவகைப்படும் என்றும், இவர் சமயக் குரவர் நால்வரிடமும் பெருமதிப்புடையவாராயிருந்தாரென்றும், "அம்மா நான் சொன் மாலை கொடுக்கின்றேன் நீ தான் யார்க்கணிய யென்கின்றாய்"...எனுந்தொடரை விளக்கி காதலுள்ளம் யார்க்கு என்றது கேட்டலும் இரங்குகின்றமையை "ஆரென்னலோடும்" ......எனுங் கம்பர் தொடரோடும் ஒப்பிட்டுக் காட்டியும் செயிண்டரிசர் எனும் பிரஞ்சு நாட்டுப் பெரியாரோடும் அடிகளை ஒப்பிட்டு ஒத்தகருத்து பெரியார்களிடை எழல் இயல்பென்பதை விளக்கியும், அடிகள் தென்னாட்டுச் சித்தர் எனப்பாராட்டியும் பேசித் தம் உரையை இனிது நிறைவித்தார்.

தலைவர் முடிவுரை.

சங்க நடைமுறையில் எடுப்பதும் முடிப்பதும் கடவுள் எண்ணத்தோடிருத்தல் போற்றத்தக்கதென்றும், ஆண்டவன் நடுவுநிலைமையை விளக்க, "கல்லார்க்கும்" .... எனும் பாவினையும், நகைச் சுவைக்கு "ஒற்றி வைத்தார்......," எனும் பாவினையும் உவமைக்கு "வாய் மூடிக்கொள்வது........." எனத் தொடங்கும் பாவினையும் எடுத்து விளக்கித் தம் உரையை இனிது நிறைவித்தார்.

தமிழ்ப் பாட்டும் திரு. சி. ஆர். சீனிவாசனும்.

பதிலுரையும் வேண்டுகோளும்.

வழக்கறிஞர், திரு. T. P. வேதாசலம்பிள்ளை அவர்கள், திருச்சி.

(*முற்றொடர்ச்சி : துணர் ௰௧, மலர் 7, பக்கம் 140*)

தமிழ் இசையாளரின் ஊக்கம் தவறான வழியில் செல்கிறதென்று பழிகூறுவதற்குமுன் சீனிவாசன் தமிழ் இசை இயக்கம் செய்திருப்பது என்னவென்பதைச் சிறிதும் எண்ணிப்பார்க்கவில்லை. அவர்போன்றவர்களின் வாழ்த்துக்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமிழிசை இயக்கம் தடையின்றிச் செழித்தோங்குமென்பது திண்ணம். இவ்வியக்கம் தமிழர்களின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. தமிழ் மக்கள் யாவரும் அதில் ஈடுபட்டுவிட்டனர். அவர்களின் ஆதரவு நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. இவ்வியக்கம் தமிழ் நாட்டில் நன்றாகக் காலூன்றிக் கொண்டு வளர்ந்தோங்கி வருகிறது. வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ தோன்றக் கூடிய எவ்வித எதிர்ப்பும் இதற்கு இடையூறு செய்யவியலாது. தகுந்த அறிஞர்களைக் கொண்டு நன்றாய் ஆராய்ந்தெடுக்கும் சிறந்த தமிழ்ப் பாடல்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகின்றன. கருநாடக இசையை இவைகளெல்லாம் வளம் பெறச் செய்யும் என்பதற்கையமில்லை. தமிழிசையியக்கம் கருநாடக இசையைப் புறக்கணிக்கும் நோக்கத்துடன் பிறக்கவில்லை. அதைப் பொது மக்கட்குப் புகட்டி அவர்களையும், நுகர்ந்து இன்புறச் செய்வதோடு பழையகாலமுதலே செல்வாக்கடைந்திருந்து இடைக்காலத்தில் அடிக்கடி கையாளப்படாமையினால் மாசுபடிந்து, தேசழிந்து மங்கியிருந்த தமிழ்ப்பாடல்களை விளக்கப் படுத்திப் பாட்டின் மேன்மையை உயர்த்தி, கர்நாடக இசையை வளர்க்கவே இவ்வியக்கம் தோன்றிற்று. இது இவ்வாறாக, தனியே ஏதோவொரு எதிர்ப்புக்குரல் கேட்கப் படுகிறது. தலைநகரமாகிய சென்னை, புது இயக்கங்களுக்கு வழிகாட்டியாக இராமல் மூலை முடுக்குகளில் இக்குரலொலியைக் கிளப்புவது வருந்தத்தக்கது. சென்னை தலைநகரமாயினும் அதுவே முழு நாடுமாகிவிடாது. இம்மாவட்டத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எல்லா வட்டங்களிலும் (சில்லா) இவ்வியக்கம் வேரூன்றிப் பெருங்கிளைகள் விட்டுத் தழைத்துப் பருத்துத் தளிர்த்து வன்மையும் வீரியமும் கொண்டு மிளிர்கின்றது. தமிழ் நாட்டில் தமிழ்மக்களுக்குப் பலவகையிலும் பயன் தருமுறையில் உயிர்ப்பொலிவுடன் விளங்குகின்றது.

சென்னையிலுள்ள சில நாள் இதழ்கள் இவ்வியக்கத்தின் வளர்ச்சி வரலாற்றைக் குறித்து எழுதப் போதுமான இட மளிக்க மனமில்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

அரசர்கள் ஆளுகையிலிருந்து பொது மக்களின் ஆளுகைக்கு இசை வந்து, இசை மேன்மை குறைந்துவிடுகிறதே என்று ஒரு பூச்சாண்டியைக் கிளப்பிவிடுகிறார் சீனிவாசன். இக் குடியரசு நாளில் பொது மக்கள் வாழ்க்கையின் இன்றியமையாத் தேவை களில் தங்களுடைய பங்கு கிடைக்க வேண்டுமென்றும், சிறப் பாக இசைப்பயிற்சியும் வேண்டுமென்றும் மக்கள் விரும்புவது முற்றிலும் நேர்மையேயாகும். எல்லா மக்களுக்கும் இன்ப மூட்டிக்களிக்கச் செய்வதால் இசையின் பெருமை தாழ்ந்து விடாது. இசைத்துறையில் பொது மக்களுக்கு அவர்களுக்குரிய பங்கை அளிக்கவும், இசையின் மேன்மையை நிலைநிறுத்தவும் ஒரே ஒரு வழிதான் உண்டு. தாய்மொழியில் பாடல்களைப் பாடி எல்லோரையும் இன்புறச் செய்து இசையன்பர்களாக்கு வதற்குத் தாய்மொழி யொன்றுதான் தகுந்த வழியாகும்.

இசைப்புலவர்கட்குரிமை வேண்டுமென்று பரிந்து பேசும் சீனிவாசன் எவ்வாறு பொதுமக்களின் ஆவலைத் தீர்க்க வழி தேடலாம் என்பதை மறந்துவிட்டார்போலும். பொது மக்க ளுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்று சொல்வதில், அவர் நினைவில் தமிழர்களில் பெரும்பாலாரையும் வைத்திருக்கிறார் என்று நம்புகிறேன். புதுக் கருத்துக்களும் அவற்றை வெளிப் படுத்தும் புதுவழிகளும் தாய்மொழிமூலமல்லாமல் பிறமொழி மூலம் நன்றாக விளங்காது. தாய்மொழி மூலந்தான் இசை யுணர்ச்சியையும் நயத்தையும் தானும் நுகர்ந்து பிறருக்கும் கற்பிக்க முடியும். புலவர்களின் உரிமையைக் கருதியும், பழய இசை உயர்வை அணுவளவும் குறைக்கக் கூடாதென்பதைக் கருதியும் சீனிவாசனைப் போன்ற இசையன்பர்கள் பழய பாடல் களைப் புதுப்பிக்கவும், மேன்மையான புதுப்பாடல்களை இயற்ற வும், தமிழ் இசை இயக்கம் போன்ற எந்த இயக்கத்தையும் மேலும்மேலும் போற்றவும் வேண்டும். முன்னணிப்புலவர்கள் தாய்மொழியிலுள்ள அருமையான பாடல்களைக் கருத்துடன் கற்றுத் தங்கள் திறமையால் நன்றாகப் பாடித் தமிழர்களை மகிழ் விப்பார்களானால், இப்பொழுது தங்களுக்குப் பொருள் விளங்கி யோ விளங்காமலோ உள்ள பாடல்களை மட்டிலும் கற்றதையே பாடிவரும் தொண்டைவிடப் பதின்மடங்கு தொண்டு புரிந்த வர்கள் ஆவார்களல்லவா ?

நம்மில் ஒருசிலர் தமிழையே போற்றுவதாக ஆணையிடுகிற வர்கள் இருக்கிறார்கள். தமிழ்மொழியிலும் தமிழ்க்கலையிலும்

பற்றுள்ளவர்களென்றும் உறுதிகூறுவார்கள் ஆயினும் தமிழ் இசைக்கு ஆதரவளிக்க வேண்டிய இன்றியமையாமை நேரும் பொழுது அதற்கு மாருக மனம் போனவாறு பேசுவார்கள், செய்வார்கள். தமிழன்பர்போல் நடித்துத் தமிழின் பெருமையைச் சிதைக்க இயன்றவையெல்லாம் செய்வார்கள். அவர்கள் உண்மையில் மிக்க சூழ்ச்சிக்காரர்கள். இவ்விதமான "எமது நண்பர்களிடமிருந்து எங்களைக் காப்பாற்றுக!" என்று கடவுளை வணங்கவேண்டியதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. "லிபரேட்டர்" செய்தித்தாளில் மிகப் பொருத்தமாகவும் அழுத்தமாகவும் சொன்னபடி அவ்வாருன போலி அன்பர்கள் 'விநோத நாட்டில் ஆலிஸ்' என்ற கதையில் சொல்லப்பட்டிருக்கும் முதலை போன்றவராவார்கள். ஒரு முதலையைக் கண்டு அறியாப்பிள்ளையான ஆலிஸ் வஞ்சமில்லாமல் பின்வருமாறு சொன்னுள் :—

"முதலை எவ்வளவு இனிமையாகச் சிரிக்கிறது,
எவ்வளவு அழகாகத் தன் நகங்களைப் பரப்பி,
புன்சிரிப்புடன் கூடியதன் வாயிற்குள்
'சிறு மீன்களே வாருங்கள்' என்று வரவேற்கிறது."

திரு. சீனிவாசன் இசை மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்றும், மக்கள் தங்கள் அறிவை மேன்மேலும் பயன்படுத்தி வளர்ச்சியையே நாடவேண்டுமென்றும் விரும்புகிருர். அவரும் இன்னும் பிற செல்வாக்குடையவர்களும் நாட்டின் வழிகாட்டிகளாகவிருந்து, நல்லவழிகளை ஆராய்ந்தறிந்து, பொது மக்களின் தேவைகளைத் தெரிந்து, அதற்கேற்றவாறு உதவியளித்துத் தங்கள் அறிவையும் திறமையையும் புதுவழிகளில் செலுத்தி இசைத்துறையிலும் நன்மை தரும் வழிகளைப் பின்பற்றி நாட்டைச் செழிக்கச் செய்தல் வேண்டும். உதவி செய்யும் நோக்கத்துடன் எல்லோரும் ஒத்துழைத்தால் கர்நாடக இசை மேன்மையான தமிழ்ப் பாடல்களால் நிறைவுற்றுப் பெருமைபெறும். எல்லாத் தமிழ் மக்களும் அவற்றைக்கேட்டு மகிழ்வார்கள். இதுவரையில் மொழியிடத்துப் பற்றுக் கொள்ளாத பெரும்பான்மையோருக்கு விளங்காத இசையினுல் சிலர் மட்டிலும் உளநிறைவடைந்திருந்தனர். தமிழ் மக்கள் இப்பொழுது திரள் திரளாகக் கூடித் தமிழ்ப் பாடல்களைக்கேட்க ஆவலுடன் முன்வருவார்களானுல் ஏன் அதைத் தடுக்க வேண்டும்? தமிழ் இசை இயக்கத்தைப் பொருளற்ற சொற்களால் பழித்துக் கூறுவதால் மனக்கசப்புண்டாவதைத்தவிர வேறென்ன பயன்? பயனில்லாத இச் செயலில் ஈடுபட்டு மனதைப் புண்படுத்துவதைவிட இசையின் இன்றியமையா நோக்கத்தைப் பெருகச் செய்து, தமிழரின் பெருங் கூட்டங்களை இன்புறச் செய்யும் வழிகளைமட்டும் எல்லோருங் கைக்கொள்ளக் கூடாதா?

பண்டைநாளைச் சேரமன்னர்கள்.

திரு. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள், ஆராய்ச்சியாளர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

1. சேரமான் குடக்கோ நெடுஞ் சேரலாதன்*

இச் சேரமான் போர் வன்மையும் கொடைச்சிறப்பும் மிகவுடையன். புலவரைப் போற்றும் பெருந்தகையாகிய புரவலருள் இவன் சீரியோனாக விளங்கினவன். இவன் சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி யென்பவனோடு பெரும் போருடற்றி அக்கிள்ளியொடு தானும் புண்பட்டு இறந்தான்.

இச் சேரமான் வீழ்ந்த காலத்து இவனைப்பாடிச்சென்று காண்பது குறித்துக் கழாத் தலையார் என்ற புலவர் இவனிருக்கை நாடிச்சென்றார். அதுபோது அவன் போர்க்களத்துள்ளான் என்பதுணர்ந்த அவர் ஆங்குச் சென்றார். அவன் போரில் விழுப்புண் பட்டு வீழ்ந்து உயிர் போகாது கிடந்தான். உடல் குருதி வெள்ளத்துட் குளித்துக் கிடப்பக் கழுத்தில் கிடந்த ஆரத்தை அவற்கு வழங்கினன். அதனைக் கண்டு பேதுற்ற புலவர் அவன் கொடைத்திறம் நினைந்து நெஞ்சு கலுழ்ந்து, "வாளேருழவ, நின்பால் பெருவளம் பெற்றுப் பீடுற்று வாழ்ந்த யாங்கள், இனி, களிறு முகந்து பெயர்குவம் எனின், அவை மழை தவிர்க்கும் குன்றம்போல் கணைபட்டுத் தொலைந்தன; நெடுந்தேர்கள் முகக்குவம் என்னின், அவை நெடும் பீடழிந்து நிலஞ் சேர்ந்தன; குதிரை கொள்வோம் எனின், வடு நிறைந்த மெய்யவாய்ப் பெரும் பிறிதாகிக் குருதிப் புனலுள் மூழ்கிக் கிடந்தன; நீ இங்ஙனை யென வந்தவர் பாடுவன வெல்லாம் நின் கழுத்தின்கட் கிடக்கும் ஆரம் பெறுவது குறித்துக் கொல்லோ; என்னே நின் கொடைநலம் இருந்தவாறு" (புறம்-368) எனப் பாடிப் புலம்பினர். பின்னர் அவனது நல்லுயிர் விண்ணுலகு புக்கது.

இனிக் கழாத்தலையார் என்னும் புலவர், இருபெரு வேந்தரும் இறந்து கிடத்தலைக் கண்டு, "செருமுனிந்து அறத்தின்மண்டிய மறப்

* பதிற்றுப்பத்து ஆறும்பத்தின் பதிகம் கூறும் சேரலாதன் இவனாயின், ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் இவனுக்குப்பின் அரசுமுறை பெற்ற சேரமானும்.

போர் வேந்தர் தாமும் மாய்ந்தனர்; அவரை நிழல் செய்த குடைகளும் துளங்கின; அவர்தம் வெற்றியும் கொடையும் நுவலும் முரசும் ஒழிந்தன; போர் மறவர் தாமும் எஞ்சாது வீழ்ந்தமையின் அமரும் உடன்வீழ்ந்து விட்டது. இவர்தம் பெண்டிரும் பாசடகுமிசையார், பனிநீர்மூழ்கார், தம் காதலர் தம் மார்பகம் பொருந்தி ஆங்கே அமைந்து ஆவி துறந்தனர்; அரும் பெறலுலகத்து இமையா நாட்டத்தவரும் நிறைய விருந்து பெற்றனர்; இவ்வீரர்தம் புகழ் மேம்படுவதாக" (புறம். 62) என்று கையற்றுப் பாடிச் சென்றார்.

ஒருவரையொருவர் வஞ்சியாது நின்று வென்றி பெறுவேம் என்று போரில் மண்டிய இவ்விரு பெருவேந்தரின் வீழ்ச்சி மண்ணுள் மன்ன வர்க்கு ஒரு நல்ல உண்மை யுணர்த்தும் நிகழ்ச்சி யாகும் என்று கருதிய நல்லிசைச் சான்றோர் பலர் இவர்கள் பட்டதை வியந்து பாடியுள்ளனர். அவருள் பரணர் என்னும் சான்றோர், "இவர்கள் பால் எத்துணையோ யானைப்படைகள் இருந்தன; அவை யாவும் அம்பால் துளங்கி, விளைத்தற் குரிய வினையின்றிப் படையொழிந்தன; குதிரைகளோ மிக்க புகழ் படைத்தவை யெனினும் தம்மைச் செலுத்தும் மறத்தகைமைந்தரோடு பட்டொழிந்தன; தேரேறிவந்த போர் மிகு சான்றோர் அனைவரும், பகைவரது அம்புபடாதபடி கண்ணைக்காத்து நின்ற கேடயம் பிடித்த கையொடு வீழ்ந்தழிந்து விட்டனர். இவர்தம் வெற்றி முரசமும் அறு பட்டழிந்தன. நெடுவேல் மார்பில் பாய்ந்ததால் வேந்தரும் பொருது களத்தே அழிந்தனர். இவர்தம் அகன்றலை நாடு இனி என்னாகுமோ" (புறம். 63) என இரங்கிப் பாடினர்.

2. சேரமான் பெருஞ் சேரலாதன்,

இச் சேரலாதன் சில பிரதிகளில் பெருந்தோளாதன் என்றும் கூறப்படுகின்றான். இப் பெருஞ் சேரலாதனும் குடக்கோநெடுஞ் சேர லாதனும் சமகாலத்தவரென்றற்கு ஏது இல்லை. இருவரும் வேறு; அவன் நெடுஞ்சேரலாதன்; இவன் பெருஞ் சேரலாதன். இவன் மிக்க வீரமும் சான்றோர் பாடும் சால்பும் உடையவன். இவனது பெருங்கேண்மை பெற்று இன்புற்று வாழ்ந்த சான்றோர் பலர்; அவருள் கழாத் தலை யாரும் வெண்ணிக் குயத்தியாரும் சிறந்தவர்.

இச் சேரமான் ஒருகால் சோழநாட்டை யாண்ட கரிகால் வளவ னொடு வெண்ணியென்னுமிடத்தே பெரும் போர் செய்தான். இவனோடு

பாண்டிவேந்தன் ஒருவனும் போர் நிகழ்த்தினன். இப் போரில் வளவன் செலுத்திய நெடுவேல் இச் சேரனது மார்பிற்பட்டு முதுகின்புறத்தே உருவிப் புண்செய்தது. மார்பினும் முகத்தினும் பட்டபுண்ணே வீரர் விழுப்புண்ணென நாளும் வேண்டியிருப்பதாகும். மார்பிற் பட்டவேல் முதுகிற் புண் செய்தது குற்றமாகாதாயினும், இச் சேரமான் விழுமிய வீரனாதலின், அதற்கும் பெருநாணம் கொண்டு ஆற்றானாய் வடக்கிருப் பானாயினன்.

இச் செய்தி தமிழ் நாடெங்கும் பரவிற்று. ஏனை யரசரும் புலவர் பெருமக்களும் வியப்பும் நன்மதிப்பும் கொண்டு இவனைப் பாராட்டுவா ராயினர். கழாத் தலையார் இதனால் ஆற்றாமை மிகக் கொண்டு, " தன் போலும் வேந்தன் ஒருவன் மார்பே குறித்தெறிந்த புறப் புண்ணிற்கு நாணி, மறத் தகை மன்னனாகிய எங்கள் பெருஞ் சேரலாதன் வாள் வடக்கிருந்தனன்; எங்கட்கு இனி இஞ்ஞாயிறு விளங்கும் பகற்போது முன்போலக் கழியாது ; உழவர் உழவு மறப்பர் ; சீறூர்களும் விழவு மறக்கும் ; இவனது வடக்கிருப்பு, உவா நாளில் ஞாயிறு தோன்ற, திங்கள் மலைவாய் மறைவதுபோல உளது ; அஃதாவது தமிழ் நாட்டின் மேலைப் பகுதியில் இனி இருளே சூழ்வதன்றி ஒளியில்லையாம் " என்று கையறவுற்றுக் கலுழ்ந்தனர். மாமூலனார் என்னும் வேறொரு சான்றோர், " கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப் பொருது புண்ணாணிய சேரலாதன், அழிகள மருங்கின் வாள் வடக்கிருந்தனன், இன்னாவின்னுரை கேட்ட சான்றோர், அரும் பெறலுலகத் தவனொடு செலீஇயர் " (அகம். 55) எனப் பரிந்து பாடிக்காட்டுவதால், கழாத்தலையாரை யுள்ளிட்ட சான்றோர் பலர் அவனோடு உயிர் துறந்தனர் என்று அறிகின்றோம்.

இது நிகழ்ந்த சில நாட்கெல்லாம், வெண்ணிக் குயத்தியார் என்னும் புலவர் பெருமாட்டி, சேரலாதன் செய்தியை நேரிற்கண்டதோடு அச் செயற்காக மனவருத்தமும் எய்தி, கரிகால் வளவனைக் காண்டற்குச் சென்று, " களியியல் யானைக் கரிகால் வளவ, கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை நின்னால் உண்டாகிய புறப் புண்ணாணி வடக்கிருந்து இவ்வுலகத்தே புகழ்மிக எய்திய சேரலாதன் நின்னினும் நல்லன் அன்றே " (புறம். 66) என்று பாடியுள்ளார். எனவே, வெற்றிப் புகழ் ஒன்றே நீ பெற்றனை; அதனை நினக்கீத்து, புறப்புண்ணாணி வடக்கிருந்து பெறும் பெரும் புகழ் அவன் எய்தினன்; இதற்கேதுவாகிய நின்னினும் அவன் நல்லன் போலும் என அவன் பிரிவால் தாமுற்ற துயரத்தை மிக்க நயம்படக் கூறினர்.

3. சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன்*

இச் சேரமான் புலவர் பலரால் பெரிதும் பாராட்டப்படும் சிறப்புடையன். இவனை வானவரம்பன் உதியன் சேரலாதன் என்றும், வாளாதே உதியன் என்றும் சான்றோர் வழங்குவர். பாரதப் போரில் இருதிறத்தார்க்கும் போர் நிகழும் காலம் முழுதும் பெருஞ்சோறு வழங்கிப் பீடு பெற்றான். ஆதலால் இவன் பெருஞ் சோற்றுதியன் சேரலாதன் எனப் படுவானாயினன் எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. ஆசிரியர் முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் பெருமான், "அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ, நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை, ஈரைம் பதின்மரும் பொருது களத் தொழியப், பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" (புறம். 2) என்று பாராட்டுகின்றார். இவன் போற்றாரைப் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும், வலியும், தெறலும், அளியும் உடையோன் என்றும், இவனது அரசியல் கீழ்கடல் முதல் மேலைக்கடல் வரையில் பரவியிருந்ததென்பதை, "நின் கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின் வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும் யாணர் வைப்பின் நன்னாடு" என்றும் இவர் கூறுவனவற்றால் அறிகின்றோம். இவனை உதியன் என்றும் பொறையன் என்றும் கூறுவது வழக்கெனச் சிலப்பதிகார ஊசல் வரிப் பாட்டொன்றால் அறிகின்றோம். இவனை அப்பாட்டும் "ஓரைவ ரீரைம்பதின்மர் உடன்றெழுந்த போரிற் பெருஞ்சோறு போற்றாது தான் அளித்த, சேரன் பொறையன்" என்று கூறுகின்றது.

இனி, இச்சோறளித்த செய்தி பற்றி ஆராய்ச்சியாளர் கூறுவது ஈண்டைக்கு வேண்டா கூறலாயினும், இதனைக் காணும் ஆராய்ச்சியாளர் இனிது அறிவதன் பொருட்டு மொழிபெயர்த்துத்தருகின்றோம்:— "பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்", "ஓரைவ ரீரைம் பதின்மருடன்றெழுந்த போரில் பெருஞ்சோறு போற்றாது தான் அளித்த சேரன்" எனவருவனவற்றிற்கு உரைகாரர்கள் ஆராய்ச்சி யின்றிப் பொருளெழுதி விட்டனர். கோதுமை யுண்ணும் கூட்டத்தவரான துரியோதன உதிஷ்ட்டிராதிகட்கு நெற் சோறுண்டு தென்னாட்டு மூலையொன்றில் வாழும் அரசன் பெருஞ்சோறு கொடுத்தானென்பது ஒரு காலும் ஒவ்வாவுரையாகும்.

---

*இவன் சேரமன்னருள் மிகப் பழையோனாகக் கருதப்படுகின்றான். பதிற்றுப் பத்தின் முதற்பத்துக்குரியோன் இவனாகலாமென்பாரும் உளர்.

முன்னே சொன்னபடி, கௌரவர் இறந்ததது குறித்துச் செய்த விழாவில் பேரெண்ணினரான மக்கட்கு இவ்வுதியன் பெருஞ் சோறளித் தான் என்று கோடலே பொருத்தமாகும். இவ்விழா, பாரதவீரர்களுக் குச் செய்த சிராத்தமாகவோ, பாரதக் கதையை நடித்த நாடகத்தின் இறுதி விழாவாகவோ இருத்தல் வேண்டும். சேரநாடு நெடுங்காலமாகக் கதாக்களியென்னும் கூத்திற்குப் பெயர் சிறந்த தென்பது உலகறிந்தது. பாட்டும் உரையுமின்றி உறுப்புக்களின் அசைவினுல் உள்ளக் கருத்தை யுணர்த்துவதே இதன் அமைதி யாகும். இத்தகைய கதாக்களி யொன்றின் இறுதி விழாவாக இப்பெருஞ் சோறளிக்கப்பட்டதாகும். இது போலும் கூத்துக்கள் தமிழ் நாட்டில் நடைபெறுவது வழக்கமாகும். செயற் கருஞ் செயல் செய்தவீரர் வரலாறுகளை நடித்துக் காட்டும் இக் கூத்துவகை, தமிழ் நாட்டின் தொன்மை வழக்காரு தலின், இவற்றைப் பட்டவர் குறி என்றும் கூறுவதுண்டு. இதனை இப்போது கம்பசேவை, கம்பக்கூத்து, கழைக்கூத்து என்றும், இச் கூத்தாடுபவரைக் கம்பஞ் சேய் மக்கள் என்றும் கூறுவர். இக் கம்பசேவையிற் கலந்தாடும் உழவர்கட்கு, உடையோர் பெருஞ் சோறளித்துப் பெருமை செய்வர்.

இனி, "நல்லான் பரப்பிற் குழுமூராங்கட், கொடைக்கடனேன்ற கோடா நெஞ்சின், உதியன் அட்டில் போல" (அக. 168) எனக் கோட் டம்பலத்துத் துஞ்சிய சேரமானுலும், "துறக்க மெய்திய தொய்யா நல்லிசை, முதியர்ப் பேணிய உதியஞ் சேரல், பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை யிரும்பல், கூளிச் சுற்றம் குழீஇயிருந் தாங்கு" (அகம். 233) என மாமூலனுராலும் பாடப்பெற்றவாகக் காணப்படுவன, இவ்வுதியன் பெருஞ்சோறளித்த 'குருக்ஷேத்திர' மன்று; குழுமூர் (கோயமுத்தூர் சில்லாவில் இப் பெயரியதோர் ஊர் உண்டு) என்னுமிடமாகும் என்றும், இச் சோற்றுக் கொடை தானும் பாரதப் போரில் நிகழ்ந்த தன்று; பண்டைப்போர் குறித்துச் செய்த நிகழ்ச்சி யொன்று என்றும், இது பிற்காலத்தே நிகழ்ந்த தென்றும் தெரிவிக்கின்றன. பாரதப் போரைக் காட்டும் கூத்தொன்றின் இறுதியில் கூத்தர்க்கும் பிறர்க்கும் இட்ட பெருஞ் சோற்று விழாவாகுமெனத் துணிவதன்றி, வேறே நாம் அறியக் கிடப்பது ஒன்றும் இல்லை.

இனி, "உதியன் மண்டிய ஒலிதலை ஞாட்பின் இம்மென் பெருங் களத் தியவ ரூதும், ஆம்பலங் குழலின்" (நற். 113) எனவரும் இளங் கீரனுர் பாட்டும், "நாடுகண் அகற்றிய உதியஞ்சேரற் பாடிச்சென்ற பரிசிலர் போல" (அகம். 65) எனவரும் மாமூலர் பாட்டும், இவனது

போர் வன்மையும் கொடைச்சிறப்பும் உணர்த்துகின்றன. இத்தகைய செம்மல், பாரதப்போரில் குருக்ஷேத்திரத்தில் போர் வீரர்க்குச் சோறு சமைத்துப்போடும் தலைமைச் சோருக்கியாக இருந்தான் என்று கொள்வது உண்மைக்குப் பொருந்துவதாக இல்லை. அன்றியும். இவ்வுதியனைப்பற்றிக் கூறும் பாட்டுக்களையும். பாடின புலவர்களையும் நோக்கின், இவனைக் கி. பி. ஐந்தாம் நூற்ருண்டிற்குப் பிற்பட்டவனுகக் கோடல் தகுமேயன்றி, அதற்கு முற்பட்டவனுகக் கொள்வது தடித்த அறியாமையின் பாற்படுவதாகும்''—History of the Tamils Page 492—4.

4. சேரமான் எழினியாதன்.

இந்தச் சேரமானை வாட்டாற்று எழினியாதன் என்றும் கூறுவர். வாட்டாறு என்பது ஒரூர். அவ்வூர்க்கட் பிறந்தது பற்றியோ, செயற்கருஞ் செயலொன்று செய்தது பற்றியோ இவன் இவ்வாறு கூறப்பட்டானுதல் வேண்டும். செய்த செயல் சிறப்புடையதாயின் அதனைச் சான்ருேர் விதந் தோதியிருப்பர். அவ்வாறு ஒன்றும் கிடைக்காமையால், இவன் அவ்வூரையுடையனுய், சேரமன்னர் குடியைச் சேர்ந்தவனுய்த் திகழ்ந்து புலவர் பாடும் புகழ் பெற்றவனுதல் தெரிகிறது. இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தவன். சேரநாட்டையும் கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஆண்டுவந்தான்.

இச் சேரமானை மாங்குடி கிழார் என்னும் புலவர் பாடியிருக்கின்ருர். இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் முதலியோரைப் பாடிய பெருந்தகையாதலால், இவனும் அச்செழியனையொப்பத் தகுதியுடையனென்பது பெறப்படும். இப்புலவர், இவனைப் பாடுங்கால், இவனது வண்மையினையும் அவ் வண்மைக்குரிய செல்வத்தையும் சிறப்பித்துக்கூறி, இவனது வீரச்சிறப்பை விளம்புவார், "உள்ளிலோர்க்கு வலியாகுவன், கேளிலோர்க்குக் கேளாகுவன், கழுமிய வேளே, வளநீர் வாட்டாற்றெழினி யாதன்," எனவும் பின்னர் அவன் வழங்கும் கொடைத்திறனை வகுத்தோதி, "மாரி வானத்து மீன் நாப்பண், விரிகதிர் வெண்டிங்களின், விளங்கித் தோன்றுக அவன் கலங்கா நல்லிசை" யெனவும், "யாமும் பிறரும் வாழ்த்த, நாளும் நிரைசால் நன்கலம் நல்கி, உரைசெலச் சிறக்க அவன் பாடல் சால்வளனே" எனவும் வாழ்த்தி மகிழ்கின்ருர். (புறம். 396)

அகநானூற்றில் ஆசிரியர் ஐயூர் முடவனுர் என்னும் புலவரால் ஆதனெழினியென ஒரு தலைமகன் பாராட்டப்படுகின்ருன். அவனைச் செல்லிக் கோமான் என்றும், செல்லிக் கோமான் என்பவனுல்கொல்லப் பட்டானென்றும் பலவாறு அறிஞர் கூறுப. அவன் வேறு; வாட்டாற்றெழினியாதன் வேறு என உணர்தல் வேண்டும்.

சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை.

இச் சேரமான் மாக்கோதை, சேரமான் பெருஞ் சோற்றுதியன் சேரலாதன் காலத்தவன். இவன் கோட்டம்பலம் என்னும் ஊரில் இறந்ததுபற்றிக் கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் மாக்கோதை யென வழங்கப்படுகிறான். இக்கோட்டம்பலம் நல்ல புலவர்கள் பிறந்த ஊராகவும் தோன்றுகிறது. கோட்டம்பலவனார் என்னும் புலவர் ஒருவரது பாட்டொன்று நற்றிணையில் காணப்படுகின்றது.

இவன் ஒரு சிறந்த புலவன்; இவன் பாடியவாக இரண்டு பாட்டுக்கள் அகத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகக் காணப்படுகின்றன. அவ்வகப் பாட்டின் வரலாறு வருமாறு; தலைவன் ஒருவன் தலைவியைத் தலைக்கூடிக் களவொழுக்கம் பூண்டு ஒழுகி வருகின்றான். அதனால் உண்டாகும் ஏதத்தை யாராய்ந்து கண்ட தோழி, தலைவியொடு அளவளாவித் தலைமகன் வரைந்து கொள்ளுதல் வேண்டி, அவனைச் சேட்படுக்க முயலுகின்றாள். அச் செயலால் தலைமகன் தெருண்டு வரைந்து கொள்வான் என்பது கருத்து.

இரவுக் குறிக்கண் வந்தொழுகுமவனை அக்குறி விலக்கி வரைவு கடாவுந்தோழி அவனைப்பார்த்து, " வான்றோய் வெற்ப, கானவர் மடிந்துறங்கும் இக் கங்குலில் கொடிய மானினம் வழங்கும் சிறுநெறிபற்றி நீ வருவதை இனி ஆன்றல் வேண்டும்; இவ்வாறு வருதலால் உனக்கு உண்டாகும் ஏதப்பாடு அஞ்சி நோய் மிகுந்து 'பனிவார் கண்ணேம் வைகுதும் " என்று கூறுகின்றாள். இவ்வாறு வருவதை விடுத்து நீ வரைந்து கொள்வது தக்கது என்பது இக்கூற்றில் எஞ்சி நிற்கிறது.

இதன்கண் தலைமகன், இரவுக்குறிவரும் போது வழியினுடைய அருமை சொல்லலுற்ற தோழி, 'அது பெருவரைச் சிலம்பு வழி; அவ்வழியில் கன்றீன்ற பிடி அக்கன்று தழுவி இனிது தூங்க அதன் களிற்றியானை தூங்காது புறங்காக்கும்; வயப்புலி மலையகம் சிலம்ப முழங்கும்' என்பாள், " அருவியார்க்கும் பெருவரைச்சிலம்பில் ஈன்றணியிரும்பிடி தழிஇக் களிறுதன் தூங்குநடைக்குழவி துயில் புறம் காப்ப"(அகம். 168) என்றாள் எனக் கூறுகின்றார். இதன் உள்ளுறையால் தலைவியின் பெற்றோர் தலைவியை இரவுப் போதில் இல் இறவாதவாறு காத்தலையும், புறத்தே காவலர் காத்தலையும் ஊரார் அலர் எடுத்தலையும் சுட்டிய இவனது புலமை இவ் வகப் பாட்டைப் படிப்பார்க்கு இன்பம் பயக்கின்றது. மலையின் அருவியினுடைய ஓசையைச் சொல்லத் தொடங்கிய இந்தச் சேரமான் கொடைக்கடன் என்ற கொடா நெஞ்சினையுடைய பெருஞ் சோற்றுதியன் குழுமூர் என்னுமிடத்துப் பெருஞ் சோறு சமைத்திட அட்டில் ஓசையை ஒப்பிட்டு அச்சேரலாதனது சிறப்பை விளக்குகின்றார்.

(தொடரும்.)

நாவலர், பண்டிதர், திரு. ந. மு. வே. நாட்டார் அவர்களது 60-ஆம் ஆண்டு நிறைவு விழா.

கரந்தைப் புலவர்கல்லூரித் தலைவர் நாவலர் பண்டிதர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவைத் தாரண ஆண்டு, சித்திரைத் திங்களில் கொண்டாடும் பொருட்டு 7-11-43 மாலை 5 மணிச்குக் கரந்தைத் தமிழ்ப் பெருமன்றத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. சங்கத்தலைவர் திருவாளர் இராவுசாகிபு ஐ. குமாரசாமி பிள்ளை அவர்கள் B. A., தலைமை தாங்கினார்கள். கீழ்க்காணும் முடிபுகள் ஒருமனதுடன் நிறைவேற்றப் பெற்றன:—

(1) 1. நாவலர் நாட்டாரவர்களின் தமிழ்த்தொண்டின் சிறப்பினைப் பாராட்டி அறுபதாம் ஆண்டு நிறைவு விழாநாளில் வாழ்த்து மடல் வழங்கல். 2. மணிமலர்வெளியிடுதல். 3. உருவப்படத்தினைச் சங்கத்தே திறந்து வைத்தல். 4. கரந்தைப்புலவர்கல்லூரி மாணவர்களுக்குப் பரிசு வழங்க நிதி ஏற்படுத்தல். 5. பொற்கிழி யளித்தல். 6 சொற்பொழிவுகள் நிகழ்த்துவித்தல். 7. விழாநாளில் ஏழைகட்கு உணவளித்தல்.

(2) இச்செயல்களையெல்லாம் நன்கு நிறைவேற்றுதற் பொருட்டுப் பூண்டி, பெருநிலக் கிழவர், திருவாளர். அ. வீரையாவாண்டையார் அவர்களைத் தலைவராகக் கொண்ட இருபத்தெழுவரடங்கிய கழகம் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது.

குறிப்பு:— கழக உறுப்பினர்கள் பெயர் பின்னர் வெளிவரும்.

செய்திகள்.

சென்னை, தமிழறிஞர் கழகச் சார்பில் 31—10—43-ல் திருவாளர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழுணர்ச்சி மாநாட்டு முடிபுகள்.

க. ஆடவர்க்குச் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் எல். டி. வகுப்பு ஏற்படுத்தி இருப்பது போல், பெண்டிர்க்கும் லேடி வெல்லிங்க்டன் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியிலாவது, கிறிஸ்தவர் ஆசிரியர்பயிற்சிக் கல்லூரியிலாவது ஏற்படுத்தவேண்டுமென்று, சென்னைப் பல்கலைக் கழகத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

உ. B. O. L. க்கும் B. A. யைப் போல, செர்விஸ் கமிஷன் உரிமை அளிக்க வேண்டும் என்று, அரசியலாரை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

ந. ஆங்கிலத்தோடு தமிழுங் கற்ற ஆசிரியர்க்கு அதிகச் சம்பளம் கொடுப்பதற்குப் பதிலாக, ஆங்கிலம் மட்டும் கற்ற ஆசிரியர்கட்குக் கொடுப்பதினும் குறையக் கொடுப்பது, பெருங் கொடுமை என்று இம் மாநாடு முடிபுசெய்கிறது.

ச. வித்துவான் பட்டம் பெற்ற தமிழாசிரியர்கட்கு ரூபா 50—3—80ம், B. O. L. பட்டம் பெற்ற ஆசிரியர்கட்கு ரூபாய் 70—5—120 ம், எல்லா உயர்நிலைப் பள்ளிகளி களிலும் ஒரேபடியான சம்பளத் திட்டம் அமைத்தல், தமிழ் வளர்ச்சிக்கு அடிப்படை என்பதை, அரசியலார்க் கும் கல்விநிலையத் தலைவர்க்கும், இம் மாநாடு தெரிவித்து அவ்வாறு புரிய வேண்டுகிறது.

ரு. தமிழுணர்ச்சி பற்றிய செயன் முறைகளிலெல்லாம் சென்னைத் தமிழறிஞர் கழகத்தோடு ஒத்துழைக்குமாறு, தமிழ் அறிஞர்களையும், மாணவர்களையும், கழகங்களை யும் இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

சு. இயன்றவரை பிறமொழி கலவாமல், இலக்கணவழுவில் லாத எளியநடையில் எழுதுமாறு, தமிழ்ச் செய்தித்தாள் ஆசிரியர்களை இம் மாநாடு வேண்டிக்கொள்கிறது.

எ. தமிழ்ச் செய்தித்தாள் நிலையங்களிலும் அச்சகங்களிலும் பிழைதிருத்துதற்கு அமைப்பவர்களைத் தமிழ்வித்துவான்களாக அமைக்குமாறு, செய்தித் தாள்நிலையம், அச்சகம், இவற்றின் உரிமையாளர்களை இம் மாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

அ. தமிழ்நாட்டில் நடைபெறும் இசையரங்குகளிலெல்லாம் தமிழ்ப்பாடல்களையே பாடுதல் வேண்டுமென்று, இசைப் புலவர்களையும் இசையரங்கு நடத்துபவர்களையும் இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது.

கூ. சித்த மருத்துவமே தமிழ் மருத்துவம் என்பதை அறிந்து அதன் ஆக்கத்திற்கு ஆவன செய்யுமாறு, தமிழ் மக்களை இம் மாநாடு வேண்டிக்கொள்கிறது.

கo. தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகளில் அறிவியற் கலைகளையும், வரலாறு தரைநூல் முதலிய பாடங்களையும், தமிழ்மொழியிலேயே நடத்தவேண்டுமென்று, சென்னைப் பல்கலைக் கழகத்தாரையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரையும் இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

கக. தமிழ் நாட்டுக் கல்வி நிலையங்கள் எல்லாவற்றிலும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்க்குத் தமிழ் கட்டாயமாக ஏற்படுத்த வேண்டுமென்று இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

கஉ. சென்னைத் தொண்டைமண்டல உயர்நிலைப் பள்ளியில் நடைபெறப்போகும் 'சபாபதி' என்னும்நாடகம், தமிழ்ப் பண்டிதர்களின் இழிவான நிலையைக் காட்டுவதால் அதனை நடிக்காமலிருக்க, இம் மாநாடு தொண்டை மண்டல உயர்நிலைப்பள்ளி நடத்து குழுவினர்களை வேண்டிக்கொள்கிறது.

ஆறு பிரத்தியயங்களின் விளக்கம்.

திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார், சென்னைப் பல்கலைக்கழக
ஆராய்ச்சியாளர்.

(முற்றொடர்ச்சி : துணர் ௰௬, மலர் 7, பக்கம் 136)

	1	1			உக்தா
	1	2	1		அத்யுக்தா
	1	3	3	1	மத்யா
1	4	6	4	1	பிரதிஷ்ட்டா

ஈண்டு, ப்ரதிஷ்ட்டா சந்தஸை நோக்குக. எண்கள் முறையே ஸர்வகுரு, ஓர் இலகு, 2 இலகு, 3 இலகு, 4 இலகு உள்ள விருத்தங்களைக் குறிக்கும். இதனையும் மேலே நாம் கொண்ட முறைப்படி அமைந்த குருலகு விருத்தத்தொகையை யும் ஒப்பு நோக்குக. இம் முறையில், பல சந்தஸுக்களின் குருலகுச் செய்கையும் அறிந்து கொள்ளுதல் கூடும். இங்கு அமைந்த கணக்கின்படி

	உக்தா	அத்யுக்தா	மத்யா	பிரதிஷ்ட்டா
ஸர்வகுரு விருத்தம்	1	1	1	1
ஓர் இலகு விருத்தம்	1	2	3	4
2 இலகு விருத்தம்	—	1	3	6
3 இலகு விருத்தம்	—	—	1	4
4 இலகு விருத்தம்	—	—	—	1

இம் முறைப்படி 'உஷ்ணிக்' சந்தஸ்வரை குருலகுக்ரியை செய்வோம் :

1	1							உக்தா
1	2	1						அத்யுக்தா
1	3	3	1					மத்யா
1	4	6	4	1				ப்ரதிஷ்ட்டா
1	5	10	10	5	1			ஸுப்ரதிஷ்ட்டா
1	6	15	20	15	6	1		காயத்ரி
1	7	21	35	35	21	7	1	உஷ்ணிக்

இதனால், உஷ்ணிக் சந்தஸில்

ஸர்வகுரு உள்ள விருத்தம்			*1*
ஓர் இலகு	,,	,,	*7*
2 இலகு	,,	,,	*21*
3 இலகு	,,	,,	*35*
4 இலகு	,,	,,	*35*
5 இலகு	,,	,,	*21*
6 இலகு	,,	,,	*7*
7 இலகு	,,	,,	*1*

இவ்வாறே குரு லகுச் செயலை எளிதில் அறிந்துகொள்க.

5 ஸங்க்யானம் (விருத்தத்தொகை)

ஸங்க்யானம் என்பது ஒவ்வொரு சந்தஸிலும் எத்தனை விருத்தங்கள் வரும் என்பதனைக் கணக்கிட்டு அறிவது. இது

மேற்குறித்த 'உத்திஷ்ட்'ச்செய்கையில் அடங்கியுமுளது. உத்திஷ்டச் செய்கையில் குரு லகு எழுத்துக்கள் எல்லாவற்றின் மேலுங் குறித்த எண்களைக் கூட்டிவந்த தொகையோடு 1 கூட்டினுல் வருந்தொகையே அந்தச்சந்தஸின் மொத்த விருத்த மாகும். உதாரணமாக, ப்ரதிஷ்ட்டா விருத்தத்தை நோக்கு வோம்: ப்ரதிஷ்ட்டா சந்தஸ் 4 எழுத்துக்களை உடையது.

1	2	4	8
—	—	—	—

இந்நான்கெழுத்துக்களின் மேலுங் குறிக்கப்பட்ட எண் களின் தொகை15. அதனேடு 1 சேர்க்க 16 ஆகும்: ப்ரதிஷ்ட்டா சந்தஸின் விருத்தம் பதினுறே ஆதல், மேல், ப்ரஸ்தாரஞ் செய்தவழி அறிந்தாமன்றே! இதுபோலவே, குரு லகுச் செய்கை யில் வரும் எண்களைக் கூட்டினுலும் அந்தச் சந்தஸின் விருத்தத் தொகை அறியலாகும். 'ப்ரதிஷ்ட்டா' சந்தஸின் குருலகுச் செய்கை நோக்கிப் பதினுறேயாதல் காண்க.

6 அத்வயோகம் (நிலவளவு)

இனி ஆருவதாக அறியவேண்டும் ப்ரத்யயம் அத்வயோகம் எனப்படும். அது நிலவளவு, அஃதாவது ஒரு சந்தஸைப் பிரஸ்தாரஞ் செய்யவேண்டுமானுல் அதற்கு எவ்வளவு இடம் வேண்டுவதாகும் என்றறிவது. இதனைத் தத்தம் வசதிக்கேற்பச் செய்யலாமாகலின், விதந்து கூறத்தக்க அவசியம் இல்லை. ஆயினும், சந்தஸின் விருத்தத் தொகையின் இரட்டிப்பில் ஒன்று குறைந்த தொகை எத்தனையோ அத்தனை யங்குல நீளமும், அச் சந்தஸின் எழுத்துத் தொகையின் இரட்டிப்பில் ஒன்று குறைந்த தொகை எத்தனையோ அத்தனை யங்குல அகலமும் அந்தச் சந்தஸைப் பிரஸ்தாரஞ் செய்வதற்கு வேண்டும் என்று முன்னோர் விதித்திருக்கின்றனர். இவ் விதிப்படி, ப்ரதிஷ்ட்டா சந்தசை ப்ரஸ்தாரஞ்செய்வதற்கு 31அங்குலநீளமும் 7அங்குல அகலமும் ஆகிய இடம் வேண்டும்.

யாப்பருங்கலவிருத்திகாரர் அங்குலம் என்பதனை விரல் என்று குறித்து, 26 எழுத்துக்களையுடைய உற்கிருதிச் சந்தஸைப் பிரஸ்தாரஞ் செய்தற்கு 134217727 விரல் நீளம் வேண்டும் என்றும், அஃது அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது காதம் நூற்றொருகோல் ஒரு முழம் ஏழு விரல் ஆகுமென்றும் குறித் திருக்கின்றுர்.

அவர் கணக்கின்படி,

12	விரல்	—	ஒரு சாண்
2	சாண்	—	ஒருகை, முழம்
4	முழம்	—	ஒரு கோல்
500	கோல்	—	ஒரு கூப்பீடு
4	கூப்பீடு	—	ஒரு காதம்

இதுகாறும் வடமொழிச் சந்தஸில் ஸமவிருத்தங்களைப் பற்றியனவே இங்கு எழுதப்பட்டன. இவ்வாறே அர்த்தஸம விருத்தம் விஷமவிருத்தம் ஆகியவற்றுக்கும் ப்ரத்யயவிலக்கணம் வடநூலிற் கூறப்பட்டுளது. அவையெல்லாம் தமிழ் மொழிக்குப் பயன்படுதல் இன்மையின், ஈண்டு எழுதப்படவில்லை.

ஈண்டு எழுதப் பட்டிருப்பவை **யாப்பருங்கலவிருத்தி வீரசோழியம்** இவற்றைக் கற்பாருக்குச் சிறிது உதவியாகுமென்னுங் கருத்துடையேன்.†

---

†பேருதவியாயிற்றென்னும் மகிழ்வும் நன்றியறிவும் உடையேம்.—பொ-ர்,